# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

8074757

C

1. District / மாவட்டம் : திண்டுக்கல்   PS: / காவல்நிலையம் : V & AC   Year: / ஆண்டு : 2022   FIR No.: / மு.த.அ. எண் : 01/22   Date: / நாள் : 08.01.22

2. (i) Act சட்டம்: The prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018   Sections பிரிவுகள்: 7(a)

   (ii) Act சட்டம்:   Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்:   Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்   Date from : நாள் முதல்   Date to : நாள் வரை   07.01.22 ம் தேதி 18.55 மணி முதல் 08.01.22-ம் தேதி 00.30 மணி வரை

   Time Period : நேர அளவு   Time from : நேரம் முதல்   Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 08.01.22   Time : நேரம் 02.00 hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 08.01.22   Time : நேரம் 02.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக   Computer typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 3 KM தென் மேற்கே

   Beat Number : முறைக் காவல் எண்   (b) Address : முகவரி கோட்ட பொறியாளர் (நெடுஞ்சாலைத்துறை) அலுவலகம், திண்டுக்கல்

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்   District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் கா. [illegible]   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் காதர் மீரான்

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு   (d) Nationality : நாட்டினம் இந்தியன்   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள்   Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில்   (g) Address : முகவரி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் மதுரை

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   1) திரு. S. மதன்மோகன், வயது 50/22, S/o. திரு. சம்பத்மோகன், கோட்ட பொறியாளர் (நெடுஞ்சாலைத்துறை), கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, திண்டுக்கல்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   —

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : -
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: -
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................... பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 8/1/2022

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 8/1/22

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

08.01.22 at 06.00 hrs

Name: பெயர் [illegible]
Rank: நிலை ....................No. எண் ..........
காவல் துணைக் கண்காணிப்பாளர் [illegible]

**<u>திண்டுக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்.01/2022. சட்டப்பரிவ.7(a) ஊழல் தடுப்பு சட்டம் 1988 (திருத்தி அமைக்கப்பட்ட) சட்டம் 2018 வழக்கின் முதல் தகவலறிக்கையின் தொடர்ச்சி.</u>**

திண்டுக்கல், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் துணைக்கண்காணிப்பாளர் ஆகிய நான் இன்று 08.01.2022-ம் தேதி காலை 02.00 மணிக்கு நிலையத்தில் இருந்தபோது மதுரை மாவட்ட அய்வுக்குழு ஆய்வாளர் திரு.கா.இப்ராஹிம் சேட் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரை பெற்று 08.01.2022-ம் தேதி காலை 02.00 மணிக்கு கீழ்கண்டவாறு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் திரு.கா.இப்ராஹிம் சேட், த/பெ.காதர் மீரான், ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், மதுரை, பெறுநர். காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திண்டுக்கல் அவர்களிடம் காலை 02.00 மணிக்கு கொடுத்த புகார் மனு விபரம் பின்வருமாறு. நேற்று 07.01.2022ம் தேதி திண்டுக்கல் கோட்டப்பொறியாளர் நெடுஞ்சாலைத்துறை (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) அலுவலகத்தில் பணிபுரியும் பணியாளர்கள் நெடுஞ்சாலை பணி செய்யும் ஒப்பந்ததாரர்களிடம் லஞ்சம் பெறுவதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் மாலை சுமார் 18.55 மணிக்கு திண்டுக்கல் கோட்டப்பொறியாளர் நெடுஞ்சாலைத்துறை (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) அலுவலகத்தில் நான் மற்றும் திண்டுக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு காவல் துணைக்கண்காணிப்பாளர் மற்றும் பார்ட்டி சகிதம் திடீர் சோதனை செய்வதற்காக திண்டுக்கல் To திருச்சி செல்லும் தென்வடல் ரோட்டின் மேற்கு பக்கம் உள்ள திண்டுக்கல் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்திற்கு எதிர்புறம் தெற்கு பார்த்து வாசல் கொண்ட இரும்பு கேட்டின் உள்ளே நுழைந்தபோது அலுவலகத்தின் முன்பக்க போர்டிக்கோவில் அரசு நான்கு சக்கர வாகனம் TN 20G 2190 நிறுத்தப்பட்டிருந்தது. அந்த வாகனத்தின் அருகில் அதன் ஒட்டுநர் திரு.தினகரன் என்பவர் நின்றிருந்தார். திண்டுக்கல் கோட்ட பொறியாளர் திரு.மதன்குமார் அந்த வாகனத்தில் ஏறுவதற்கு வந்தபோது அவரிடம் நான்

என்னையும், காவல் துணைக்கண்காணிப்பாளர் மற்றும் போலீஸ் பார்ட்டியினரை அறிமுகம் செய்து கொண்டு அலுவலகத்தை திடீர் தணிக்கை செய்வதற்காக வந்த விபரம் அவரிடம் தெரிவிக்கப்பட்டு அலுவலகத்திற்குள் அழைத்து செல்லப்பட்டார். அவரை தொடர்ந்து அவரது ஒட்டுநர் திரு.தினகரனும் கோட்ட பொறியாளர் திரு.மதன்குமார் அவர்களின் கருப்பு நிற பையை எடுத்துக்கொண்டு கோட்டப்பொறியாளரின் அறைக்குள் வந்தார். அங்கு நான் திண்டுக்கல் கோட்டப்பொறியாளர் திரு.மதன்குமார் அவர்களின் கருப்புநிற பையை சோதனை செய்தபோது அதன் நடுப்பகுதியில் அலுவலக கோப்புகளுடன் இரண்டு காக்கிநிற கவர்கள் இருந்தன. அந்த கவர்களில் என்ன ஆவணங்கள் உள்ளது என்று விசாரிக்க, அதற்கு கோட்டப்பொறியாளர் ஒரு கவரில் ரூ.3,20,000/-ம் என்றும், மற்றொரு காக்கிநிற கவரில் ரூ.1,50,000/-ம் இருப்பதாக கூறினார். அந்த இரண்டு கவர்களையும் எடுத்து சோதனை செய்ய ஒரு கவரில் ரூ.3,20,000/- (2000x160=3,20,000), மற்றொரு கவரில் ரூ.1,50,000/- (500x150=1,50,000) இருந்தது. இந்த பணம் பற்றி விசாரிக்க ஒப்பந்ததாரர் திரு.சிவாஜி என்பவர் தன்னிடம் கடனாக பெற்ற பணத்தை திருப்பி கொண்டு வந்து கொடுத்த பணம் என்று கூறினார். மேலும் அவரை சோதனை செய்ததில் அவரது பேண்டின் பின்பக்க பாக்கெட்டில் இருந்த பர்ஸில் ரூ.3,090/- இருந்தது. அலுவலகத்தில் மேலாளர் அறையில் இருந்த ஒப்பந்ததாரர் திரு.சிவாஜி என்பவரிடம் திண்டுக்கல் கோட்டப்பொறியாளர் திரு.மதன்குமாருக்கு கொடுத்த பணம் ரூ.4,70,000/- பற்றி விசாரிக்க அவர் திண்டுக்கல், நெடுஞ்சாலை கோட்டப்பொறியாளர் அலுவலகத்தில் கடந்த 10 வருடங்களாக ஒப்பந்தம் எடுத்து பணி செய்து வருவதாகவும், கடைசியாக CRIDP ஸ்கீமில் ரூபாய் ஐந்தரை கோடி மதிப்புள்ள Package 105 என்ற பணியை தற்போது செய்து வருவதாகவும், மேலும் இந்த ஜனவரி மாதம் CRIDP ஸ்கீமில் டெண்டர் நடைபெற இருப்பதாகவும், தற்போது செய்து வரும் பணிக்கும் மேலும் இந்த வருடம் ஒப்பந்தம் கிடைப்பதற்காகவும் ரூ.4,70,000/-த்தை கோட்டப்பொறியாளருக்கு கொடுத்ததாக கூறினார். மேலும் கோட்டப்பொறியாளர் அவர்கள் பணம்

வாங்காமல் ஏற்கனவே பார்த்த பணிக்கு பில்களின் தொகையை விடுவிப்பதற்கு காலதாமதம் ஏற்படுத்தி அவர் மேற்கொண்டு பணிசெய்வதற்கு தடையாக இருப்பதாலும், மேலும் புதியதாக பணி வழங்குவதில் சிக்கல் ஏற்படாமல் இருக்க வேறு வழியின்றி நிர்பந்தத்தின் பேரில் பணம் கொடுக்கவேண்டிய சூழ்நிலை உள்ளது என்றும், இந்த நிர்பந்தத்தினால் தான் நான் இந்த பணம் கொடுத்தேன் என்றும் கூறினார். கோட்டப்பொறியாளர் திரு.மதன்குமார் மற்றும் ஒப்பந்ததாரர் திரு.சிவாஜி ஆகியோரின் வாக்குமூலம் என்னால் பதிவு செய்யப்பட்டது. கோட்டப்பொறியாளரிடமிருந்த பணம் ரூ.4,70,000/-கைப்பற்றப்பட்டது. மேலும் ஒப்பந்ததாரர் திரு.சிவாஜி என்பவரை சோதனை செய்ய அவரிடம் பணம் ரூ.1,20,000/- இருந்தது. அந்த பணம் பற்றி விசாரிக்க அவரிடம் வேலை செய்யும் ஆட்களுக்கு நாளை சனிக்கிழமை சம்பளம் கொடுப்பதற்காக வைத்திருப்பதாக கூறினார். அதனால் அந்த பணம் அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் கோட்டப்பொறியாளரின் பர்ஸில் இருந்து ரூ3,090/- அவருடைய சொந்தப்பணம் என்று கூறியதின் பேரில் அவரிடம் திரும்ப ஒப்படைக்கபட்டது. அலுவலகத்தில் பணியில் இருந்த கோட்ட கணக்கர் திரு.M.பெரியசாமி என்பவரை சோதனை செய்ததில் ரூ.210/- இருந்தது. கண்காணிப்பாளர் திரு.மருதநாயகம் என்பவரை சோதனை செய்ததில் ரூ.40/- இருந்தது. உதவியாளர் திருமதி.த.மணிமேகலை என்பவரின் கைப்பையை சோதனை செய்ததில் ரூ.700/- இருந்தது. உதவியாளர் திருமதி.ப.நாகலெட்சுமி என்பவரின் கைப்பையை சோதனை செய்ததில் ரூ.120/- இருந்தது. உதவியாளர் திரு.K.சதிஸ்குமார் என்பவரை சோதனை செய்ததில் ரூ.240/- இருந்தது. உதவியாளர் திருமதி.பொ.மோகனா என்பவரின் கைப்பையை சோதனை செய்ததில் ரூ.350/- இருந்தது. இளநிலை உதவியாளர் திருமதி.அ.அமுதா என்பவரின் கைப்பையை சோதனை செய்ததில் ரூ.700/- இருந்தது. தட்டச்சர் திரு.க.தனபால் என்பவரை சோதனை செய்ததில் ரூ.1,070/- இருந்தது. முதுநிலை வரைதொழில் அலுவலர் திரு.M.G.கணேசன் என்பவரை சோதனை செய்ததில் ரூ.270/- இருந்தது. இளநிலை வரைதொழில் அலுவலர் திரு.ப.ரத்தினவேல் என்பவரை சோதனை செய்ததில் ரூ.2,000/- இருந்தது.

இளநிலை வரைதொழில் அலுவலர் திரு.செ.காமராஜ் என்பவரை சோதனை செய்ததில் ரூ.640/- இருந்தது. இளநிலை வரைதொழில் அலுவலர் திரு.ப.விஜயசெபாஸ்டின் என்பவரை சோதனை செய்ததில் பணம் ஏதும் இல்லை. பதிவுறு உதவியாளர் திரு.A.தண்டபாணி என்பவரை சோதனை செய்ததில் ரூ.1,700/- இருந்தது. அலுவலக உதவியாளர் திரு.A.ஜான்பாஸ்கர் என்பவரை சோதனை செய்ததில் ரூ.560/- இருந்தது. அலுவலக உதவியாளர் திரு.V.ஜெயபிரியன் என்பவரை சோதனை செய்ததில் ரூ.50/- இருந்தது. அலுவலக காவலர் திரு.ப.பாஸ்கரன் என்பவரை சோதனை செய்ததில் ரூ.100/- இருந்தது. வாகன ஓட்டுநர் திரு.P.தினகரன் என்பவரை சோதனை செய்ததில் ரூ.3,300/- இருந்தது. டிராயிங் பிரிவு, கம்யூட்டர் ஆப்பரேட்டர், திரு.T.கார்த்திகேயன், NMR என்பவரை சோதனை செய்ததில் ரூ.1,390/- இருந்தது. மேற்படி பணியாளர்களிடம் இருந்த பணம் சம்மந்தமாக விசாரிக்க அவர்களது சொந்தபணம் என்று கூறியதின்பேரில் அவர்களிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அலுவலகத்தின் தரைத்தளம் மற்றும் முதல்தளத்தில் இருந்த அறைகளை சோதனை செய்ததில் சந்தேகத்திற்குரிய வகையில் பணம் ஏதும் இல்லை. மேலும் அனைத்து பணியாளர்களின் வாக்குமூலம் பெறப்பட்டது. இந்த அலுவலகத்தில் வேறு பொதுமக்கள் யாரும் சோதனையின் போது இல்லை. இந்த அலுவலகத்தில் 4 CCTV கண்காணிப்பு கேமிராக்கள் செயல்படும் நிலையில் உள்ளது. இந்த அலுவலகத்தில் எவ்விதமான ஆவணங்களும் சோதனையின் போது கைப்பற்றப்படவில்லை. மேலும் இத்திடீர் தணிக்கையின் போது அலுவலகத்திலிருந்த ஆவணங்களுக்கோ மற்ற பொருட்களுக்கோ சேதம் ஏதும் ஏற்படுத்தப்படவில்லை. மேலும் சோதனையின் போதிருந்த அலுவலர்களுக்கோ, மற்றவர்களுக்கோ உடல் ரீதியாகவோ மற்றும் மன ரீதியாகவோ எவ்வித துன்புறுத்தலும் ஏற்படுத்தவில்லை. இந்த திடீர் இணை ஆய்வு தொடர்பாக செயல்முறை குறிப்புகள் 07.01.2022ம் தேதி 18.55 மணிமுதல் 08.01.2022ம் தேதி 00.30 மணிவரை தயார் செய்யப்பட்டது. எனவே ஒப்பந்ததாரர் திரு.சிவாஜி என்பவரிடமிருந்து கையூட்டாக ரூ.4,70,000/- பெற்ற

திண்டுக்கல் நெடுஞ்சாலைத்துறை கோட்டப்பொறியாளர் திரு.மதன்குமார் என்பவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு Sd/-xxxxx (K.Ibrahim Sait, 08/01/2022)

Sir, Received the complaint on 08.012022 at 02.00 Hrs, on prior permission registered a case in Dindigul Vigilance and Anti-Corruption Cr.No.01/2022 u/s 7(a)of of P.C Act 1988, as amended by the PC (amendment) Act 2018, on 08.01.2022 at 02.00 hrs. Sd/-xxxxx (J.Nagarajan, Deputy Superintendent of Police, V&AC, Dindigul 08.01.2022)

Original FIR along with the complaint of Tr.K.Ibrahim Sait, the Inspection Cell Inspector, O/o. the Inspection Cell Officer, Madurai and the Joint Surprise check proceedings are submitted to the Chief Judicial Magistrate/Special Judge, Dindigul and copy of the FIR is submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

8/1/22

(J.Nagarajan)
Dy.Supdt. of Police,
Vigilance & Anti-Corruption,
Dindigul.